மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஊராட்சி வளர்ச்சித் துறை மூலமாகப் போடப்படுகின்ற சாலைகள் எல்லா மாவட்டங்களுக்கும்தான் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட சில சாலைகள் சேர்க்கப்படவில்லையென்று தெரிவிப்பார்களானால், அதுபற்றி பரிசீலிக்கப்படும். குறிப்பாக, தர்மபுரி மாவட்டத்திற்காக ரூ. 2 கோடி திட்டத்தின்கீழ் பல புதிய சாலைகள் போடப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே அந்த கீழ்ப்பசலை சாலைக்கு செல்கின்ற வழியிலே 4 கிராமங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் சேர்த்தால் ஏறத்தாழ 4,000 ஜனத்தொகை வருகிறது. அங்கெல்லாம், அதிகாரிகள் ஜீப்பிலே கூடச் செல்ல முடியவில்லை. இதனால், தொகுதியைச் சுற்றிப் பார்க்கக்கூட முடியவில்லை. அவ்வளவு மோசமாக இருக்கிற காரணத்தால், அந்தச் சாலையை உடனடியாகப் போட அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, சமீபத்திலே முதலமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு கருத்தையே தெரிவித்து இருக்கிறார்கள். 1,500 மக்கட் தொகை இல்லாவிட்டால், அந்தப் பஞ்சாயத்தைச் சேர்ந்த 4, 5 கிராமங்கள் இருக்குமானால், அவைகளையும் ஒன்றாக இணைத்து 1,500க்கு மேல் வருகிறது என்று சேர்த்து, அவற்றையும் இதில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள்—யோசனை தெரிவித்தார்கள். அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கும்முடிப்பூண்டித் துணை வட்டத்திலுள்ள சாலைகள்.

***525. வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், தேர்வாய் கிராமம் முதல் பாலவாக்கம் வரை கரடிபுத்தூர் கிராமத்தின் வழியே பஸ் செல்லும் பாதையை, கிராமச்சாலைச் சிறப்புத் திட்டத்தின் கீழ் தார்ச்சாலையாக்கும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

1973 நவம்பர் 30]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

* **526. வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டத்திலுள்ள தேர்வழி கிராமம் முதல் ஜி.என்.டி. தேசிய நெடுஞ்சாலைக்கு கோட்டைக்கரை வழியாக, கிராமச்சாலைத் திட்டத்தின் (Rural Road Scheme) கீழ் தார்ச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன இலக்கணப்படி, 1,500 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு என்றிருந்தாலும், பேருந்து சாலைகள் செல்கின்ற சாலைகளுக்கு முதலிடம் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே. தேர்வழி கிராமம், அதன் உட்பட்ட சிற்றூர்களின் மக்கட் தொகை கணக்கீட்டில், மொத்த மக்கள்தொகை 1,500-க்கு எட்ட வில்லை. ஊர்கள், சிற்றூர்கள் மக்கட்தொகை கணக்கீட்டில் 1,500 மக்கட் தொகை அதற்கு மேற்பட்ட குடியிருப்புகள் நிறைய இருக்கின்றன. நிதி ஒதுக்கீட்டைக் கவனிக்கும்போது, இப்பொழுது இதை சேர்த்துக்கொள்ள இயலாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பஸ் போகின்ற சாலையைப் பார்த்தோமானால், இன்றைய தினம் எல்லா இடங்களுக்கும் பஸ்கள் போவதால், எவை எவை பஸ்கள் செல்லக்கூடிய முக்கிய பாதைகள், எந்த எந்த பஸ் சாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும், எவையெ வற்றைச் சேர்த்துக்கொள்ளலாம் என்பவைகளை எல்லாம் பற்றி பரிசீலனை செய்துகொண்டு வருகிறோம்.

எல்லாபுரம், கும்முடிப்பூண்டி ஒன்றியங்களில் சர்க்கரைக் கார்டுகள் வழங்கல்.

* **527. வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் சர்க்கரைக் கார்டுகள் வழங்கப்பட்டுவிட்டனவா ?